<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 395/2012 | சாட்சி | பி.வா.சா.4 |
| பெயர் | சின்னதம்பி | நாள் | 25.03.2024 |
| தகப்பனார் பெயர் | முத்துகவுண்டர் | | |

<u>வாதி தரப்பில் பி.வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை:–</u>

1) இவ்வழக்கை வாதி கூட்டுக்குடும்ப சொத்தில் பாகபிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். இவ்வழக்கிலுள்ள 4ம் பிரதிவாதி அம்மாசி என் தாயார் என்றால், சரிதான். மேற்படி 4ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் மகாலிங்கம், துரைசாமி, சின்னதம்பி ஆகியோர்கள் 6முதல் 8 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால், சரிதான். என் தாயார் அம்மாசியின் தகப்பனார் பெயர் குப்பண்ணகவுண்டர் ஆகும். குப்பண்ணகவுண்டரின் மனைவி பெயர் ஐயம்மாள் ஆகும். என் தாய் வழி பாட்டனாரின் பூர்வீகம் பழையூர், தாசகாப்பட்டி கிராமம் ஆகும்.

2) என் தாயார் அம்மாசியை சூரப்பள்ளி கிராமத்திலுள்ள சின்னானூரில் திருமணம் செய்துகொடுத்தனர். மேற்படி குப்பண்ணகவுண்டர்–ஐயம்மாள் தம்பதியினருக்கு வையாபுரி, பழனியப்பன், என இரண்டு ஆண் வாரிசுகளும், என் தாயார் அம்மாசி, சின்னபொண்ணு, மயிலி (எ) மயில் ஆகிய மூன்று பெண் வாரிசுகளும் உள்ளனர். இவர்களில் என் தாயார் அம்மாசியை தவிர மற்ற அனைவரும் உயிருடன் உள்ளனர். மேற்படி அம்மாசியின் வாரிசுகளான துரைசாமி, மகாலிங்கம், சின்னதம்பி ஆகியோர்களில் துரைசாமி இவ்வழக்கு நிலுவையிலிருக்கும் பொழுது இறந்துவிட்டார். அதனால், அவரது வாரிசுகளான பிரேமலதா மற்றும் ஜெகதீசன் ஆகியோர் இவ்வழக்கில் 9, 10 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால், சரிதான்.

3) 1ம் பிரதிவாதி வையாபுரி என்பவரது மகளைதான் நான் திருமணம் செய்துள்ளேன் என்றால், சரிதான். இவ்வழக்கில் வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால், எனக்கு படிக்க தெரியாததால் என் வழக்கறிஞர் மேற்படி சங்கதிகளை என்னிடம் படித்து கூறியுள்ளார். அதனால், அதிலுள்ள சங்கதிகள்

எனக்கு தெரியும். இவ்வழக்கிலுள்ள பிரதிவாதிகளுள் யார் யார் பதிலுரை தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால், அது குறித்து நான் தெரிந்துகொள்ளவில்லை.

4) தற்போது இவ்வழக்கை எந்தெந்த பிரதிவாதிகள் எதிர்த்து வழக்காடுகிறார்கள் என நான் தெரிந்து கொண்டேனா என்றால், வையாபுரியும், பழனியப்பனும் மட்டும்தான் இவ்வழக்கில் எதிர்வாதம் செய்துவருகிறார்கள். இவ்வழக்கில் நான் தனியாக பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. என் முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால், என் வழக்கறிஞர் படித்துக்காட்டியதன் அடிப்படையில் எனக்கு தெரியும்.

5) 1ம் பிரதிவாதியும், நானும் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்தவர்கள் என்றால், சரிதான். இந்த வழக்கை தவிர என் மீது மேட்டுர் நீதிமன்றங்களில் சொத்து சம்மந்தமாக ஏதேனும் வழக்கு இருந்ததா என்றால், ஒரு வழக்கு இருந்தது. அதை நான் தான் தாக்கல் செய்திருந்தேன். அதனால், நீதிமன்றம் மற்றும் வழக்குகள் குறித்து பரிட்சியம் உள்ளது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சாட்சிய பிரமாண பத்திரிக்கையை எனக்காக மட்டும் தான் தாக்கல் செய்தேனா அல்லது மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேனா என்றால், எனக்காக மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன்.

6) இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்கும் விவரம் 1ம் பிரதிவாதியை தவிர மற்ற பிரதிவாதிகளுக்கு தெரியுமா என்றால், தெரியாது. இன்று சாட்சியம் அளிப்பதற்காக என்னுடன் யார் யார் வந்துள்ளனர் என்றால், நானும், 1ம் பிரதிவாதியும் வந்துள்ளோம். வாதிக்கும், 1ம் பிரதிவாதிகும் இடையே பாகபிரிவினை ஆகிவிட்டதாக நான் சொல்லும் நிலையில் எந்த தேதியில் பாகபிரிவினை ஆனது என்றால், குறிப்பாக தேதி எனக்கு தெரியாது. அவ்வாறு வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே பாகபிரிவினை ஏற்பட்டதாக சொல்லும் சமயத்தில் எனக்கு என்ன வயதிருக்கும் என்றால், சுமார் 25 வயது இருக்கும்.

7) மேற்படி பாகபிரிவினை எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை. மேற்படி பாகபிரிவினை யார் யார் மத்தியஸ்தர்களாக இருந்தார்கள் என்றால், ஊர்கவுண்டர் வெள்ளையன் மற்றும் இரண்டு நபர்கள் முன்னிலையில் பாகம் பிரித்து கொண்டனர். அவ்வாறு மேற்படி வாய்மொழி பாகபிரிவினை ஊர் கவுண்டரும், இரண்டு நபர்கள் முன்னிலையில் நடந்தது என குறிப்பாக என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை.

8) இவ்வழக்கில் என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை தவிர வேறு எந்த எழுத்துமூலமான ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அவ்வாறு பாகபிரிவினை செய்ததாக சொல்லும் சமயத்தில் நான் மேற்படி பாகபிரிவினை நிகழ்வில் பங்கெடுக்கவில்லை என்றால், சரிதான். மேற்படி பாகபிரிவினையில் யார் யாரெல்லாம் பங்கெடுத்து கொண்டனர் என்றால், என் பாட்டனார் குப்பண்ண கவுண்டரின் வாரிசுகள் அனைவரும் அதில் கலந்து கொண்டனர்.

9) மேற்படி பாகபிரிவினையில் பெண் வாரிசுகளுக்கு பாகம் ஒதுக்கப்பட்டதா என்றால், நிலமாக பாகம் ஒதுக்கப்படவில்லை. என் தாயார் அம்மாசிக்கு ஒரு பசு மாடும், என் சின்னம்மா சின்னபொண்ணுவிற்கு வெள்ளி வளையல் கொடுத்தனர். என் மற்றொரு சின்னம்மா மயிலி என் பாட்டியுடனே வசித்து வந்ததால் அவருக்கு பாகம் எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி சங்கதிகள் குறித்து என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால், சரிதான்.

10) நான் சொல்வதுபோல் அவ்வாறு எந்த பாகபிரிவினையும் நடைபெறவில்லை என்றாலும், அதனால் தான் மேற்படி சங்கதிகளை நான் என் முதல் விசாரணையில் குறிப்பாக சொல்லவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதி என் மாமனார் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

11) மேற்படி குப்பண்ணகவுண்டருக்கு தாசகாப்பட்டி கிராமத்தில் எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டிருந்தது என்றால், சுமார் 1.20 ஏக்கர் பாத்தியப்பட்டிருந்தது. எவ்வகையில் பாத்தியம் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. அவர் அனுபவித்து வந்தது குறித்து எனக்கு தெரியும். மேற்படி சொத்திற்குரிய சர்வே எண் என்னவென்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி சொத்துக்கள் ஒரே இடத்தில் உள்ளதா என்றால், இல்லை. மூன்று இடங்களில் அமைந்துள்ளது. ஒவ்வொரு இடங்களிலும் எவ்வளவு விஸ்தீரணத்தில் அமைந்துள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி மூன்று தாக்குகளுக்குரிய செக்குபந்தி விவரங்கள் என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான்.

12) வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டதாக நான் சொல்லும் சமயத்தில், கிராம நிர்வாக அலுவலரையோ, சர்வேயரையோ வைத்து சொத்துக்கள் அளந்து பிரிக்கப்பட்டதா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி பாகபிரிவினையில் யார் யாருக்கு எந்தெந்த சர்வே எண்ணில் பாகம் ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், சர்வே எண் எனக்கு தெரியாது. மேற்படி பாகபிரிவினையில் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் மட்டும்தான் பாகம் பிரிக்கப்பட்டதாக நான் சொல்கிறேனா என்றால், ஆமாம்.

13) என் பாட்டி குப்பண்ணகவுண்டரின் மனைவி ஐயம்மாளுக்கு பூர்வீகம் எது என்றால், சூரப்பள்ளி கிராமம், கடைகாரன் வளவு ஆகும். என் பாட்டி ஐயம்மாளுக்கு சுயார்ஜீதமாய் கிரயப்படி பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஏதேனும் உள்ளதா என்றால், சொத்து உள்ளது. ஆனால் அது கிரயப்படி பாத்தியப்பட்டதா என எனக்கு தெரியாது. நான் என் முதல் விசாரணை சாட்சியத்தில் மேற்படி ஐயம்மாளுக்கு எந்த வகையில் மேற்படி சொத்து பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால், ஐயம்மாளின் தாயார் வழியில் பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேன். மேற்படி ஐயம்மாளின் பெற்றோர் பெயர் எனக்கு தெரியாது.

14) மேற்படி சொத்து ஐயம்மாளுக்கு தானசெட்டில்மெண்ட் கொடுக்கப்பட்டதா, கிரயம் கொடுக்கப்பட்டதா என்பது குறித்து இதுவரை நான் எந்த ஆவணங்களையாவது பார்த்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி ஐயம்மாள் பெயரில் உள்ளதாக நான் சொல்லும் மேற்படி சொத்து குறித்து ஏதேனும் வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால், இல்லை. ஐயம்மாளின் பெற்றோர் தங்கள் குடும்பத்திற்குள் பாகம் பிரித்துக்கொண்டபோது மேற்படி சொத்து ஐயம்மாளுக்கு கொடுக்கப்பட்டதாக நான் சொல்கிறேனா என்றால் இல்லை. ஐயம்மாளுக்கு மேற்படி சொத்து எவ்வகையில் பாத்தியப்பட்டது என்பது குறித்து எனக்கு நேரடியாகவோ, ஆவணங்கள் மூலமாகவோ தெரியாது என்றால், சரிதான்.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.